இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஒரு காலத்தில் தொலையில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்.ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார். பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை அழித்தார். இரு இனத்தவரையும் தம்மோடு இணைந்திருக்கும் புதியதொரு மனித இனமாகப் படைத்து அமைதி ஏற்படுத்தவே இவ்வாறு செய்தார். (எபே 2: 13-16)

# நலஆதரவுப் பணி என்பது ஒரு விலைமதிக்கமுடியாத கொடை

உரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில், பெருங்குடல் பிரச்சனை தொடர்பான நோய்க்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, அங்கேயே ஓய்வெடுத்துவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அங்கிருந்தே கடந்த ஞாயிறன்று வழங்கிய மூவேளை வேண்டல் உரையில், அன்றைய நற்செய்தி வாசகம் வழங்கிய, 'உடல் நலமற்றோர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்' (மாற் 6:13) என்ற வாக்கியத்தை தன் மையக்கருத்தாகக் கொண்டு பகிர்ந்து கொண்டார்.

இயேசுவால் அனுப்பப்பட்ட சீடர்கள், உடல் நலமற்ற பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தியதாக கூறுவதில் நாம் காணும் எண்ணெய் என்பது, நோயில் பூசுதல் என்ற அருளடையாளத்தை குறித்து நிற்பதாக உள்ளது



என உரைத்த திருத்தந்தை, உடலுக்கும் உள்ளத்திற்கும், ஆறுதலையும் ஊக்கத்தையும் தரும் இந்த எண்ணெய், நோயாளிகள்மீது காட்டப்பட வேண்டிய அக்கறையையும் உள்ளடக்கியதாக உள்ளது என்று விளக்கினார்.

எண்ணெய் பூசிக் குணப்படுத்தலில் வரும் 'எண்ணெய்' என்பது, நோயுற்றோருக்கு செவிமடுத்தல், அவர்களுடன் நெருக்கமாக இருத்தல், அக்கறை காட்டுதல், கரிசனையுடன் செயல்படுதல் போன்றவைகளையும் குறிப்பிடுகிறது, ஏனெனில், இது வலியைப் போக்கும் வகையில் வருடிக் கொடுப்பதாகும் எனவும் தன் மூவேளை செபஉரையின்போது எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சிறிது நாட்களிலோ அல்லது பலகாலம் கடந்தோ அனைவருக்கும் 'நோயில் பூசுதல்' என்ற அருளடையாளம் தேவைப்படலாம், அல்லது, நாம் யாருக்காவது இதனை வழங்க வேண்டியிருக்கலாம், அத்தகைய வேளைகளில், உதவி தேவைப்படும் உள்ளங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வழியாகவோ, அவர்களை நேரில் சென்று சந்திப்பதன் வழியாகவோ, உதவிக்கரம் நீட்டுவதன் வழியாகவோ, நம்மால் இதனை வழங்க முடியும் என எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்நாட்களில், நலஆதரவுப் பணிகளின் முக்கியத்துவம் குறித்தும், அது விலைமதிக்கமுடியாத கொடையாக உள்ளது என்பதையும், அது என்ன விலை கொடுத்தும் காப்பாற்றப்படவேண்டும் என்பதையும் அனுபவம் வழியாக தான் உணர்ந்துகொண்டதாகக் கூறியத் திருத்தந்தை, இதற்கு, அனைவரின் பங்களிப்பும் தேவைப்படுகின்றது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், என அனைவருக்கும் தன் பாராட்டுக்களையும் ஊக்கத்தையும் வழங்குவதாக மூவேளை இறைவேண்டல் உரையின் இறுதியில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உடல் நலமற்றோர் எவரும் தனிமையில் விடப்படக்கூடாது என்பதை மனதில்கொண்டு, செவிமடுத்தல், அக்கறை காட்டுதல், அருகிலிருத்தல் போன்றவற்றோடு 'நோயில் பூசுதல்' வழியாக உதவுவோம் எனவும் விண்ணப்பித்தார்.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்

# ‘குடும்பம்’ 2022-ம் ஆண்டு மறைக்கல்வி தினக் கொண்டாட்டத்தின் மையம்

கோலாலம்பூர்: அடுத்தாண்டு ஜனவரி மாதம் 30-ஆம் நாளன்று கொண்டாடப்படவுள்ள மறைக்கல்வி தினத்தின் கருபொருள், “குடும்ப வாழ்வு: புனிதத்திற்கு ஒரு வழி” (1 கொரி 12:12). இம்முடிவு கடந்த 2021, ஜூலை திங்கள் 5-7 ஆம் திகதி வரை நடைபெற்ற மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் ஆண்டுக் கூட்டத்தில் தேர்வுச் செய்யப்பட்டது.

இக்கருபொருளானது, தேர்வுச் செய்யப்பட்ட 2022-ஆம் ஆண்டுக்கான மறைக்கல்வியின் மையக்கருத்தாகிய ‘குடும்பம்’ என்பதிலிருந்து தோன்றியது என்றியயோடு. குடுப்பத்திற்கான அடிப்படைத் தேவைகளாகிய அன்பு, குடும்ப இறைவேண்டல், ஒற்றுமை, ஒருவரை ஒருவர் ஏற்று அரவணைப்பது போன்றவற்றின் இன்றியமையாத் தன்மை வெளிப்படுத்துகிறது.

மேலும், “குடும்ப வாழ்வு: புனிதத்திற்கு ஒரு வழி” எனும் இந்த கருபொருள், தலத்திருஅவையாக நமது புனிதத்தின் வளர்ச்சியை எடுத்துரைப்பதாகவும் உள்ளது. இக்கொண்டாட்டத்திற்கான அதிகாரப்பூர்வ செய்தி பின்னர் தயாரிக்கப்பட்டு அனைத்து மாமறைமாவட்டங்களுக்கும் மறைமாவட்டங்களுக்கும் அனுப்பப்படுள்ளது.

மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் ஆயர்நிலை தலைவராகிய பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தனது உரையில் தற்போது கோவிட்-19 தொற்றின் நிமித்தம், மறைக்கல்வி பணியில் மாமறைமாவட்டங்களுக்கும் மறைமாவட்டங்களுக்கும் எதிர்கொள்ளும் சவால்களை ஒப்புக்கொள்வதாகக் கூறினார். தொடர்ந்து, இந்த தொற்றுநோய், பல குடும்பங்களை பல்வேறு வகைகளில், குறிப்பாக நம் குழந்தைகளையும் அவர்களது மனநிலையையும் வெகுவாகப் பாதித்துள்ளது என்றார். மறைக்கல்வி பணித்துறையை வெகுவாகப் பாதித்துள்ள இத்தொற்று, இணைய வசதி இல்லாத இடங்களில் இது பெரும் சவாலாகவும் அமைந்துள்ளது என்று மேலும் கூறினார்.



நிறைவாக, மாணவர்களுடன் இணையம் வழி தொடர்பு களை ஏற்படுத்திக்கொண்டு, நிலையான மறைக்கல்வி வழங்குவதில் மறைக்கல்வி பணிக்குழு தொடர்ந்து போராடி வருவது இக்கூட்டத்தில் அனைவராலும் உணரப்பட்டது.

# விவிலிய கதைகளுக்கு உயிர்க்கொடுத்தனர் நல்லாயன் பங்கு மாணவர்கள்-

**கோலாலம்பூர்:** இங்குள்ள நல்லாயன் பங்கின் தொடக்க நிலைப்பள்ளி மாணவர்களுள் 6 முதல் 12 வயது மற்றும் இடைநிலைப் பள்ளி மாணவர்களில் சிலரும் விவிலியக் கதை சொல்லும் போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். கூகுல் சந்திப்பு (google meet) வாயிலாக நடைபெற்ற இப்போட்டி நிகழ்வு, பங்குத்தந்தை கிறிஸ்தோபர் சூசைப்பிள்ளை உட்பட பெற்றோர்களையும் மிகவும் கவர்ந்த நிகழ்ச்சியாக ஏறக்குறைய இரண்டரை மணி நேரம் நடைபெற்றது.

இந்நிகழ்வு இயங்கலை வாயிலாக நடைபெற்றாலும், மறைக்கல்வி ஆசிரியர்கள். பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் யாவரும் மாணவர்களின் படைப்புத் திறனை வெளிப்படுத்தத் தேவைப்பட்ட உபகரணங்களைத் தயாரிப்பதில் பெரும் பங்காற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் நீதிபதிகளாகப் பங்காற்றிய ஐரின் லூர்ட்ஸ், என்டியா பெர்னாண்டர் ஆகிய இருவரும் தேர்வுச் செய்த வெற்றியாளர்களுக்கு, மின்சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டது.

கதைகூறுதல் என்பது தொன்றுதொட்டு மறைக்கல்வி போதனாமுறையில் கையாளப்படும் ஒரு சிறந்த வழிமுறை என்றால் மிகையாகாது. கதை கூறுதல் வழி மாணவர்கள் உணர்வுப்பூர்வமாக, விவிலிய கதாப் பாத்திரங்களுக்கு உயிர் அளிப்பவர்களுமாக மாறுகின்றனர் என்பது அந்நிகழ்வில் உணரப்பட்டது.



*Google meet வாயிலாக கதை கூறும் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களில் சிலர்..*

# சமய சுதந்திரம் குறித்த முதல் உலக உச்சி மாநாடு

அனைவருக்கும், எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும், சமய சுதந்திரம் உறுதிசெய்யப் படவேண்டும் என்பதை வலியுறுத்தி, அமெரிக்க ஐக்கிய நாட்டின் வாஷிங்டன் நகரில், ஜூலை 13, கடந்த செவ்வாயன்று சமய சுதந்திரம் குறித்த முதல் உலக உச்சி மாநாடு நடைபெற்றது.அடிப்படை மனித உரிமைகள் உலகெங்கும் பாதுகாக்கப்பட வேண்டிய தன் அவசியம் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்தில், இந்த உலக மாநாடு துவங்கப்பட்டுள்ளது.

(வத்திக்கான் செய்தி)

# ஏன் கிறிஸ்மஸ் பெருவிழாவும் திருக்காட்சியும் ஒரே நாளில் கொண்டாடப்படுவதில்லை?

K. ஜெசிந்தா, ஈப்போ.

நாம் கொண்டாடி வரும் கிறிஸ்மஸ் பெருவிழாவானது, தொடக்கக் கால திருஅவை ஏற்படுத்திய விழா அல்ல. நற்செய்திகளிலோ திருமுகங்களிலோ இயேசுவின் பிறப்பு பெருவிழா கொண்டாடப்பட்டதாகக் குறிப்புகள் இல்லை. இயேசு பிறந்து ஏறக்குறைய 320 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இயேசுவின் பிறப்பு பெருவிழா தொடங்கப்பட்டது. மேலும், இயேசு பிறந்து எத்தனையாவது நாளில் ஞானிகள் இயேசுவை வந்து கண்டனர் என்பதும் நமக்குத் தெரியாது. ஞானிகள் வருகையைப் பற்றி மத்தேயு ஒருவர் மட்டுமே குறிப்பிட்டுள்ளார்.

லூக்கா அவரது நற்செய்தி 2:7-ல். ‘விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே, பிள்ளையைத் துணியில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர்’ என்று குறிப்பிட்டுள்ளார்.



தீவனம் என்றால் உணவு என்று பொருள். தீவனத்தொட்டி என்பது கால்நடைகளுக்கு புல், புண்ணாக்கு, இலைதழைகள் வைக்கும் பெட்டி பொன்ற ஒரு தொட்டி. இயேசு அத்தகைய தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்டதாக லூக்கா கூறுகிறார். இயேசு உணவாகவும் இங்கே சித்தரிக்கப்படுகிறார். அதுவே நமக்கு வாழ்வளிக்கும் உணவான ‘நற்கருணை’ யாக மாறுகிறது.

மத்தேயு நற்செய்தி 2:11-ல் ‘வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள்; நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்; தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப்போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி பார்ப்போமானால், ஞானிகள் இயேசு பாலகனை மாட்டுத் தொழுவத்தில் தான் கண்டார்கள் என்று கூற இயலாது. அவரை வீட்டில் கண்டு வணங்கியதாகத் தான் குறிப்பு உள்ளது. எனவே, ஞானிகள் இயேசு பிறந்த அந்த நாளில் அல்லாமல் மற்றொரு நாளில்தான் இயேசுவைக் கண்டிருக்க வேண்டும். அப்போது, யோசேப்பும் மரியாவும் குழந்தையுடன் ஒரு வீட்டில் தங்கியிருக்க வேண்டும்.

லூக்காவின் கூற்றுப்படி, (மாட்டுத்) தொழுவத்தில் பிறந்த இயேசு, மத்தேயுவின் கூற்றுப்படி பின்னர் ஒரு வீட்டிற்கு மாறியிருக்க வேண்டும்.

எனவே, ஞானிகளின் வருகை விழா (திருக்காட்சி) இயேசு பிறந்த நாளில் அல்லாமல் மற்றொரு நாளில் கொண்டாடுவதற்கு மேற்கண்ட விளக்கம் ஒரு காரணமாகும். திருவழிபாட்டின் விபரத்தின்படி இயேசுவின் பிறப்பு பெருவிழா மானிடமகன் மனுவுருவானதையும், ஞானிகள் வருகை பெருவிழா மானிடமகனின் வெளிப்பாட்டையும் குக்கிறது.

அடுத்து, எத்தனை ஞானிகள் வந்தார்கள் என்று மத்தேயு குறிப்பிடவில்லை. அவர்கள் அளித்த மூன்று வகை காணிக்கைகளைக் கொண்டு மூன்று பேராக இருக்கலாம் என்பது ஒரு யூகமாகும். ஞானிகள் மூன்று பேருக்கு மேலாகவும் இருக்க வாய்ப்புண்டு.

-ஆர்.கே.

### 10-வது குடும்பங்கள் உலக மாநாடு

பத்தாவது குடும்பங்கள் உலக மாநாடு, “குடும்ப அன்பு: புனித வாழ்வுக்கு ஓர் அழைப்பு மற்றும் ஒரு வழி” என்ற தலைப்பில், 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் தேதி முதல், 26ம் தேதி வரை உரோம் மாநகரில் நடைபெறும்

### விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவது இல்லை

நம் இவ்வுலக இறுதிப் பயணத்திற்குப் பின்னும் நிலைத்திருப்பது, நாம் ஆற்றிய நற்செயல்களே. எனவே, வாழும்போது, இந்த உலகிற்கு ஏதாவது நன்மைகளைச் செய்வோம். கார்ல் மார்க்ஸ் (Karl Marx) அவர்கள் கூறியுள்ளது போன்று, விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவது இல்லை.

# ஆண்டுதோறும் 80 இலட்சம் டன் பிளாஸ்டிக் கடலில் கலக்கிறது

கடந்த ஜூலை 11, ஞாயிறன்று ‘உலக கடல் நாள்’ உலகெங்கும் கடைபிடிக்கப்பட்டது. அன்று, தங்களுடைய பணிக்கும், வாழ்வாதாரத்திற்கும் கடலையே நம்பியிருக்கும் அனைத்து மக்களுக்கும் சிறப்பான விதத்தில் அர்ப்பணிக்கப்பட்ட இந்த 'கடல் ஞாயிறு' தினத்தில், அவர்களுக்காக இறைவேண்டல் செய்வதோடு, பெருங்கடல், மற்றும் கடல் பகுதிகளை அக்கறையுடன் பேணுவோம் என்ற அழைப்பையும் முன்வைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

'கடலின் நலன் குறித்து அக்கறை கொள்ளுங்கள், கடலில் பிளாஸ்டிக் பொருட்களை கொட்டவேண்டாம்' என்ற விண்ணப்பத்தையும், விசுவாசிகளிடம் முன்வைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஐ.நா. நிறுவனத்தின் புள்ளிவிவரங்களின் படி, ஒவ்வோர் ஆண்டும் 80 இலட்சம் டன்



நெகிலி பொருள்கள் கடலைச் சென்றடைவதாகவும், கடல் வாழ் உயிரினங்களைக் கொல்வதாகவும், மனிதகுல உணவுச்சங்கிலியில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




**தூய ஆவியார் வழங்கும் கொடைகளால் நாம் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று எண்ணவோ, அவர்களை நம் சுயநலத்திற்காகப் பயன்படுத்தவோ கூடாது. அன்புடன்கூடிய பணியை பொதுமக்கள் அனைவரின் நலனையும் மனதில் கொண்டதாக எடுத்து நடத்துவதே கிறிஸ்தவப் பண்பு.** (கர்தினால் தாக்லே)

# மனந்திறந்து பேச ஊக்கம் அளித்தல் அவசியம்

**திருமணம் செய்துகொள்ள விழையும் இளையோர், மனந்திறந்து பேசுவது, திருமண வாழ்வுக்குத் தேவையான தயாரிப்புகளில் முக்கியம் என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்துகிறார்..**

மண ஒப்பந்தமான இளம் தம்பதியர், மணவாழ்வில் சந்திக்கக்கூடிய பிரச்சனைகளையும், சவால்களையும் புரிந்துகொள்ள, பங்கு சமுதாயம், அவ்விருவருக்கும் உதவி செய்யவேண்டும். இளம் தம்பதியர், ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஈர்ப்பினால், தங்களுக்குள் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளை, மறைக்கவோ, குறைக்கவோ கூடும். இவ்வாறு செய்வது, பிற்காலத்தில் பிரச்சனைகள் வெளிவரக் காரணமாகிறது. இதனால், தாங்கள் திருமண வாழ்வில் எதிர்பார்ப்பது என்ன, ஒருவர், ஒருவரிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன, எவ்வகையான வாழ்வை உருவாக்க விழைகின்றனர் என்ற விபரங்களை மனந்திறந்து பேச, இளம் தம்பதியருக்கு ஊக்கம் அளிக்கப்படவேண்டும்.

இவ்வாறு மனம்திறந்து பேசுவது, இருவரும் ஒன்றிணைந்து வாழ்வதற்கு உதவிசெய்யும். அவர்கள் இணைந்திருப்பதற்கு, அவர்களிடையே உள்ள ஆரம்ப ஈர்ப்புமட்டும் உதவப்போவதில்லை என்பதையும், இருவருக்கும் பொதுவான விடயங்கள் உள்ளனவா என்பதையும் உணர்வதற்கு, இந்த கலந்துரையாடல் உதவியாக இருக்கும். ஆசையைவிட, எளிதில் காணாமல் போகக்கூடிய, கணிக்க முடியாத, ஆபத்தான விடயம் வேறெதுவும் இல்லை. உண்மையான, நிலையான அர்ப்பணத்தை வழங்க முடியும் என்ற காரணம் இல்லாமல், இளம் தம்பதியர், திருமணம் செய்துகொள்ள முடிவெடுப்பதை, ஊக்கப்படுத்த முடியாது. (அன்பின் மகிழ்ச்சி 209)




# இயேசுவின் பரிவிரக்கம் நமதாகட்டும் !

பொதுக்காலம் 16-ஆம் ஞாயிறான இன்று, நமக்கு வழங்கப்பட்ட அனைத்து வாசகங்களும் ஆயனைப் பற்றியும் அவரின் பரிவிரக்கத்தைப்பற்றியும் எடுத்துரைக்கின்றன. இன்றைய சூழலில் நமக்கு யாரேனும் பரிவு காட்டமாட்டார்களா? அதனால் நமது துன்பசூழல் விலகாதா? என்றே நம் அனைவரின் மனநிலையும் உள்ளது. அந்த பரிவு, வார்த்தையாகவோ, செயலாகவோ, பொருளாகவோ இருந்து விட்டால், அதுதான் உண்மையான ஆற்றல்மிக்க செயல். இந்த நோய்த் தொற்று நோய்க்காலம் அதைப் பற்றி எண்ணத் தோன்றுகிறது. உதவி எங்கிருந்துவரும்? நிச்சயமாக மனிதரின் வழியாக ஆண்டவரே அதைச் செய்துமுடிப்பார்.

அதைத் தான் இன்றைய முதல்வாசகத்தில் எரேமியா நூலில் ஆண்டவர் கூறுகிறார். இதுவரை இருந்த ஆயர்களின் தோற்றத்தை மாற்றியமைகின்றார். இறைவன், அவரின் ஆடுகளைத் துரத்தி சிதறடிக்கும் மேய்ப்பர்களுக்குக் கேடு என்றும், அவரின் ஆடுகளைத் தகுந்த முறையில் அவரே பராமரிக்கப்போகிறார் என்று கூறுவதையும் காண்கிறோம். எரேமியா இயேசுவின் வருகையைப் பற்றியும் இங்கு முன்னறிவிக்கிறார். தாவீதின் தளிராகத் தோன்றி, மக்களுக்கு விடுதலைத் தருவார் என்று உறுதியளிக்கிறார்.

திருத்தூதர் பவுல் அவரின் கடிதத்தில், இருவேறு இனத்தவரை ஒன்றாக்கியவர் இயேசுகிறிஸ்து என்று கூறுகிறார். கடவுளுக்குச் சொந்தமானவர்கள் இவர்கள் மட்டுமே என்று நினைத்திருந்த யூதமக்களைப் போல, கடவுளை அறியாத புறவினத்தாரும் இப்போது அவரை இயேசு கிறிஸ்து வழியாக அறிந்துகொண்டனர். இனிமேல் எதிலும் வேறுபாடு இல்லை. அனைவருமே கடவுளின் மக்கள் என்றும் சிலுவையினால் ஒருடலாக்கி, தூய ஆவியின் வழியாக தந்தையை அறியச் செய்தார் என்றும் கூறுகிறார்.

நற்செய்தியில் இயேசுவிடம் சீடர்கள் தாங்கள் செய்தவை, கற்பித்தவை அனைத்தையும் கூறி மகிழ்ச்சியடைகின்றார்கள். தொலைதூரம் சென்று பணி செய்தபின், களைத்து வீடு திரும்பினாலும், அந்த களைப்பைவிட, இயேசு சொன்னவாறு பணிசெய்த மகிழ்ச்சியே அவர்களுக்குப் பெரிதாக இருந்தது. அவர்களின் உடல்நிலையை அறிந்த இயேசு அவர்களுக்கு ஓய்வும் அவசியம் என்று அவரே அவர்களைத் தனிமையான ஓர் இடத்திற்கு செல்லப் பணிக்கிறார். இந்த இடத்தில் நாம் இரண்டு கருத்துகளைப் பார்ப்போம். நாமும் நம் அன்றாட வாழ்க்கையில் நடந்தவற்றை நாளின் முடிவில் ஆண்டவரிடம் ஒப்புவிக்க வேண்டும். அவ்வாறு நாம் செய்தால், முதலில் நம் குறைகளும் நிறைகளும் தெரியும். நிறைகளுக்காக நன்றியும், குறைகளுக்காக மன்னிப்பும் கேட்கத் தோன்றும். அடுத்த நாளுக்கான புத்துணர்ச்சியும் இன்னும் அதிகமான வழிகாட்டுதலும் நமக்குக் கிடைக்கும்.

அடுத்ததாக, ஆண்டவர் இயேசுவின் கருணையை நாம் சற்று எண்ணிப் பார்த்தோமென்றால், ஆயரில்லா ஆடுகளைப் போல் அந்த மக்கள் இருந்ததால், அவர்கள் மேல் பரிவு கொண்டதாக நாம் வாசிக்கின்றோம். இறைவனின் பரிவும், பார்வையும், அருளும் நமக்கு நிறைவாக கிடைக்கவேண்டும் என்று ஆவல் கொள்ளும் நாம், இந்த தொற்றுநோய் காலக்கட்டத்தில், நம்மை விட ஏழ்மையில் இருக்கும் மக்களை அந்தப் பரிவோடு நோக்குவோம். ஒவ்வொரு இடங்களிலும், உணவு வங்கியை ஏற்பாடு செய்யும் இந்த நேரத்தில் நம்முடைய அளவுக்கதிகமான பயன்பாட்டை குறைத்து, இதுபோன்ற பரிவுள்ள செயல்களில் ஈடுபடுவோம்.

-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்

### பொதுக்காலம் 16-ஆம் ஞாயிறு

எரே 23: 1-6
திபா 23: 1-3a. 3b-4. 5. 6
எபே 23: 1-3a. 3b-4. 5. 6
மாற்கு 6: 30-34
ஞாயிறு வாசகம் -ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1
திருப்புகழ்மாலை - வாரம் 4